பித்தம் தெளிய பேரறிஞர் ஷா மருந்து!

“சண்டைக் காலத்தில் கை கட்டிக் கொள்வது சமாதானப் பிரியமாகாது”

அமைதியைக் குலைக்கும் அடிப்படை யுணராது, அகிம்ஸை பேசும் அருளாளர்கள்!

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அணா ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (10—12—49) வெளியீடு (11—12—49) [இதழ் 113

சீனப் போர் முடிந்தது போல்தான் என்கிறார் மாசே துங்

மக்கள் விடுதலைப் படையை உற்பத்திப் பெருக்கத்துக்குத் திருப்புவார்!

ஜனநாயக - பொருளாதார சீரமைப்புத் தீவிர வேலைகள்

உண்மைச் சமாதானத்துக்கு உற்ற வழி காண்மின்!

“சரியாகவோ, தவருகவோ போரில் ஈடுபட்டுவிடும் நாடொன்று, மலையில் மோதுண்டு ஓட்டையாகிவிடும் கப்பலொன்றினையொத்ததாகும். அந்த நேரத்தில் எல்லோருடையவும் கவனமும் நீரை இறைத்துக் கப்பலைக் காப்பாற்றுவதாகத்தானிருக்கவேண்டும்; கப்பலோட்டிகள் தவருகவோ, கொடுமையாகவோ நடந்து கொண்டனரென்று கூறிக்கொண்டு வாளாயிருந்துவிடக் கூடாது. நீங்களும் உங்களது குடும்பமும், அயலாரும் எதிரியை வீழ்த்தவேண்டும்; அல்லது அவனால் நீங்கள் வீழவேண்டும். போரைத் தடுக்க சமாதானப் பிரியர்கள் தங்களாலியன்றவற்றையெல்லாம் செய்யவேண்டும்; அப்படிச் செய்தும், போர் மூண்டுவிட்டதேயானால் கையைக் கட்டிக்கொண்டு, உட்கார்ந்துவிடக்கூடாது; போராட்டத்தில் இறங்கியே தீரவேண்டும்.”

சமாதானப்பிரியர்கள் பற்றி பேரறிஞர், உலகப் புகழ் பெற்ற நாடகாசிரியருமான ஜியார்ஜ் பெர்னார்டுஷாவின் கருத்து என்ன? சமாதான காலத்திலும், போர்க்காலத்திலும் சமாதானப் பிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய போக்கு என்ன? போர்க்காலத்திலும் அவர்களுக்கு வேலையுண்டா? இவைகளுக்கான விளக்கத்தை, பேராசிரியர் ஷாவிடமிருந்து பெற விரும்பினர், பட்டாளத்தில் சேரக் கூடாதென்ற மனேபாவமிக்க நண்பரொருவர். அந்நண்பருக்கு பெர்னார்டுஷா தந்த பதிலை, மேலே நாமெடுத்துக் காட்டியிருப்பது. பேரறிஞரின் கருத்துரையில் காணப்படும் சொல் ஒவ்வொன்றும் வளமும், ஆழமும் மிகுந்துத்திகழ்கிறதென்பதை யாரே மறுக்க முடியும்! ‘சரியாகவோ தவருகவோ, போர் மூளத்தொழுதல்’ என்று அவர் கூறுவதாலும், தவருன பாதையில் போர் மூட்டப் பெற்று மக்கள் சிக்கவைக்கப்படுகிருர்களென்பதை வெளிப்படை. போர் இல்லாத காலமெல்லாம் சமாதானகாலமென்ருே, ஒரு போர் நடந்து முடிவுற்ற பின்னர், சமாதானம் தானே வந்து குடிபுகுந்துவிடுமென்ருே இன்றைய உலக சமுதாய அமைப்புமுறையில் அறுதியிட்டுக் கூறிவிடுதல் முடியாது. துப்பாக்கிச் சத்தமும், விமானமோதுதல்களும், வெடிகுண்டு வேட்டுகளும் இன்னபிறவுமேதான் போரின இலட்சியங்கள் என்ருே, இவற்றை மட்டும் இல்லாமல் ஆக்கிவிட்டால் உலகில் சாந்தி குடிகொண்டுவிடும் என்ருே கூறுவோரை, உண்மையுரைப்போர் என்று கூறுதல் முடியாது; உலகை ஏமாற்றுவோர் என்றே கூறுதல் சாலும். சமாதானத்தைக் குலைப்பது போர்க்களமே என்று கருதுவோர் மட்டுமே, பிறரை அப்படிக் கருதவைக்கும் ஏமாற்று வேலையிலீடுபடுவோர் மட்டுமே “சண்டை சண்டை; சமாதானம்தேவை தேவை” என்ற மேற்பூச்சு அலங்கார பீதி—பொறுமை பேச்சுவார்த்தைகளீடுபட்டு மக்களை மயக்கத்திலீடுபடுத்தி வருவோர், போர்க்களத்துக்குப் பெரும் பெரும் வல்லரசுகளை நேருக்கு நேர் கொண்டு வந்து நிறுத்துவது, மனக்களத்தில் நிகழும் பல்வேறு கோட்பாடுகளின் சட்டலாட்ட சக்திகளே யென்பதை உணர்வோர், அல்லது உணர்ந்ததை வெளியிடுவோர் மிகச் சிலரேயாவர்.

இத்தகைய சட்டலாட்ட சக்திகளை எடுத்துக்காட்டி, முரண்பாடுகளும் மோதுதல்களும் ஏற்படாதிருக்க, வழிவகையும், மாற்றமும் தந்துரைக்கமுந்துறுவோரே இன்று சமாதான விரோதிகளென்று தூற்றப்படுகிருர்கள். அதே நேரத்தில், சமாதான பங்கத்துக்கு அடிப்படை காரணமாயத்திகழும் விஷ வித்துக்களைப்பற்றி ஏதும் பேச மனமோ, முதுகெலும்போ இல்லாது, மேலாகப் பூசி மெழுகி, அமைதி அகிம்சை என்று அருளொழுகப் பேசி, ‘போர்க் காலத்தில் போன’ இடந் தெரியாமல் போய்விடும்’ பிரமுகர்கள் சமாதானப் பிரியர்களென சபாஷ் பட்டம் தரப்படுகிருர்கள். பேரறிஞர் பெர்னார்டுஷா தந்திருக்கும் விளக்கத்தில் இக்கருத்துக்கள் இலைமறை காய்

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

“சீன உள்நாட்டுப் போர் ஏறத்தாழ முடிந்துவிட்டது”

என்று கம்யூனிஸ்டு சீனவின் தலைவர் மாசே துங் அறிக்கையொன்று கூறுகிறது.

இராணுவத்திலுள்ள ஒழுங்கு கட்டுப்பாட்டில் சிறந்த மூப்பது லட்சம் உண்மைப் பாட்டாளிகளும் உற்பத்திப் பெருக்க வேலைகளுக்கு இனி திருப்பப்படுவரென்பதை சித்தரிக்கிறது மாசே துங் கின் அறிக்கை.

மாசேதுங்கின் அறிக்கை மேலும் கூறியதாவது:—

மக்கள் விடுதலைப் படையினர் நாடெங்கும் பரந்த மாபெரும் வெற்றியைப் பெற்றுவிட்டனர். எதிரியின் சிற்சில பகுதிகளே சொச்சமாயுள்ளன. வெற்றியைக் கிட்டி விட்டோமாகையால் மக்கள் விடுதலைப் படையினர் இனிமேல் நாட்டுப் பாதுகாப்புப் படையாளராகவும், உற்பத்திபடையினராகவும் திகழப் போவது உறுதி. நீண்டகாலப் போரால் பாதிப்புண்டு நிற்கும் மக்களுக்குதவவும் புதிய ஜனநாயகப் பொருளாதார சீரமைப்பு விரைவில் வந்துறப் பாடுபடவும் நம் படையினர் தயங்கமாட்டார்கள்.

மக்கள் விடுதலைப்படைக்கு விடுத்திருக்கும் கட்டளைக் குறிப்பொன்றிலேயே மாசே துங் இக்கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர்.

பீகாரில் ஆதித்திராவிட நலன் திட்டம்

பாட்னு, டிச. 8—

ஆதித்திராவிடர்களில் ஒரு பகுதியினரான டோம்ஸ் என்ற பிரிவினரின் நலனுக்காக ரூ. 6000 கடன் உதவியை பீகார் ஆதித்திராவிட சேவா சங்கத்திற்கு மாகாண சர்க்கார் அனுமதித்திருக்கிறது.

யூகோ—அரபு நல்லுறவு நீடிக்கும்

பீரட், டிச 9

பாதுகாப்பு சபைக்கு யூகோவின் அபேட்சையை ஆதரித்தது முதல், அரபு-யூகோ நல்லுறவு நீடித்து வருகிறதென்று ஒரு குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. யூகோ சர்க்கார் அரபு அகதிகளுக்காக 1500 டன் கோதுமை நன்கொடையாக அளித்த சந்தர்ப்பத்தில், இந்தக் குறிப்பு பத்திரிகை நிருபர்களிடம் கொடுக்கப்பட்டது.

யூகோவிற்கு அகதிகளின் கஷ்டம் என்னவென்று தெரியும் என்றும், டிட்டோவின் தலைமையில் அவர்கள் தங்கள் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ளவே பாடுபடுகிருர்கள் என்றும் அக்குறிப்பில் விளக்கப்பட்டிருந்தது.

அரசியல் குற்றவாளிகளுக்கு முச்சந்தியில் தூக்கு!

பெல்கிரேட், டிச. 9—

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆல்பேனிய அரசியல் கைதிகள், டிரானவில் முச்சந்தியில் தூக்கிலிடப்படுகிருர்களாம். இம்மாதிரி தண்டனை நிறைவேற்றுவது ஏற்கனவேயே ஆரம்பமாகிவிட்டது என்று, பெல்கிரேட் பத்திரிகைகள் கூறுகின்றன.

முச்சந்தியில் தூக்கிலிடப்பட்டதும் போலீஸ் காவலில் சவம் 24-மணி நேரம் தொங்கிக் கொண்டிருக்குமாம்.

நாஜிகள் ஆல்பேனியாவில் கடைப்பிடித்த முறைகளையே ஆல்பேனிய சர்க்காரும் இப்பொழுது பின்பற்றுகிறது.

தகரம் விலை குறைகிறது

லண்டன், டிச. 9

போருக்குப்பின் இறக்கப்பட்ட உலோக மார்க்கெட்டில் உள்ள நிலைமையிலிருந்து, தகரத்தின் விலை மிகவும் குறைந்திருப்பதாகத் தெரிய வருகிறது. உற்பத்தியாளர்கள் சப்ளையை இன்னும் குறைக்காவிட்டால், விலை இன்னும் இறங்கிவிடலாம் என்று கூறப்படுகிறது.

— ருனேப்

‘ரஷ்யாவிடமிருந்து இந்தியாவுக்கு ஆபத்து ஆகாயவழியால் மட்டுமே!

;0:

விமானப் படைப் பலத்தைப் பெருக்கிக்கொள்க! பிரிட்டிஷ் பத்திரிகையாளர் கருத்து

லண்டன், டிச. 9—

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ரஷ்யாவினுல் ஆபத்து ஏற்படுவது சாத்தியம். ஆனல் இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் ஒத்துழைக்கும் பட்சத்தில், அவர்களை யாரும் அசைக்க முடியாது என்று. லெப்டினென்ட் ஜெனரல் சர். பிரான்ஸிஸ் டக்கர் ‘மாஞ்செஸ்டர் கார்டியன்’ பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர் மேலும் எழுதியிருப்பதாவது:—

ரஷ்யாவிடமிருந்து கடல் வழியாக இந்தியாவுக்குப் பாகிஸ்தானுக்கும் ஆபத்து ஏற்பட வழியே இல்லை. மாபெரும் இமாலய மலைச் சிகரங்களின் பாதுகாப்பால் தரைமூலமும் ஆபத்தை எதிர்நோக்க முடியாது. ஆனல், ஆகாய வழியாக ஆபத்து வருவது முற்றிலும் சாத்தியமே.

இந்தியாவையும் பாகிஸ்தானையும் பாதுகாத்தல் இராணுவம் விமான படைப் பலத்தில் சிறந்து விளங்கும்படியாக இருக்கவேண்டும். இந்த விமான பலத்தைக் கொண்ட படைகள் பர்மா, லாஸா, ஆப்கன், பாரசீகக் கணவாய்கள் இந்த இடங்களிலேயே எதிரிகளைத் தடுத்து முறியடிக்கும்படியாக இருக்கவேண்டும்.

இந்த விமானப்பலம் இல்லையென்ருல், ஆப்கன் பாரசீக கணவாய்களின் வழியாக மட்டுமின்றி திபேத் பர்மா எல்லை வழியாகவும் ஆபத்து நேரக்கூடும். பர்மாவில் ஒரு பலமான தளத்தை சீனக் கம்யூனிஸ்டுகள் ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமே.

மாலை மணி

சென்னை 10—12—49 சனிக்கிழமை

அவசியமுமில்லை- :: :: அவசரமுமில்லை!

குன்னூர் உணவுச்சத்து ஆராய்ச்சிக் கூடங்கள் இந்தியத் தலைநகரிலிருந்து நீண்ட தொலைவிலிருப்பதால், அவைகளினுல் ஏற்படும் முழுப் பலனையும் மத்திய ஆட்சியாளர் அடைய முடியவில்லை என்று கருதி, அந்த ஆராய்ச்சிக் கூடங்களை வடநாட்டிற்கு மாற்றும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

'போர் கமிட்டி' செய்த சிபார்சின்படியே இந்தத்திட்டம் தீட்டப்பட்டு, அமுலுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. 'போர் கமிட்டி' செய்த சிபார்சுகளில் பலவும் தென்னாட்டை எவ்வெவ்வழிகளிலெல்லாம் புறக்கணிக்க முடியுமோ, அவ்வழிகளிலெல்லாம் புறக்கணிப்பது என்பதேயாகும். அந்த எண்ணம், 'போர் கமிட்டி'யில் இடம் பெற்றிருக்கும் வடவர்களுக்கு மட்டுமல்ல, ஆதிக்க பீடத்திலும், அதிகார பீடத்திலும் ஏறியிருக்கும் ஒவ்வொரு வட இந்தியர் உள்ளத்திலும் ஊறிப்போய்க்கிடக்கிறது.

குன்னூரிலுள்ள உணவுச் சத்து ஆராய்ச்சிக் கூடங்கள், சென்ற முப்பது ஆண்டுகளாக அரும்பெரும் ஆராய்ச்சி நடத்திப் பேரும், புகழும் பெற்று வந்திருக்கிறது குன்னூரில். ஆரம்பத்தில் ஆராய்ச்சிக் கூடங்கள் காணும்போதே எல்லாவகைக்கும் ஏற்ற இடம் அது, என்று கண்டறிந்துதான் அந்த இடத்தைத்தேர்ந்தெடுத்திருந்திருக்கிறார்கள், ஆராய்ச்சி வல்லுநர்கள். தென்னாட்டில் அத்தகையதொரு சிறப்புடைய ஆராய்ச்சிக்கூடம் இருப்பதே வடநாட்டினர்க்குக் கண்ணுறுத்துகிறது போலும்.

சத்துள்ள உணவுப் பொருள்கள், எவை எவை என்று ஆராய்வதும், அவற்றின் பெருக்கத்தைக் காண, என்ன என்ன வழிகளைக் காண வேண்டும் என்பதைக் கண்டு பிடிப்பதும், சத்துள்ள உணவுப் பொருள்களை எவ்வெவ் வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதை ஆராய்ந்தறிவதும், உணவு சத்து ஆராய்ச்சிக்கூடத்தின் முக்கிய பணிகளாகும். உண்மைகளைக் கண்டறிவது ஆராய்ச்சிக்கூடத்தின் வேலை; கண்டறிந்த உண்மைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது அரசாங்கத்தின்-ஏனைய ஸ்தாபனங்களின்-மக்களின் கடமையாகும். இந்த நிலையில், ஆராய்ச்சிக்கூடம் எங்கிருந்தால் என்ன? தலைநகருக்குத் தொலைவில் உணவு சத்து ஆராய்ச்சிக்கூடம் இருப்பதால், மத்திய அரசாங்கம் போதுமான அளவுக்கு அதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று கூறுவதில், ஏதாவது பொருள் இருக்க முடியுமா? போக்குவரத்தை மணிக் கணக்கில்-நிமிஷக்கணக்கில் கொண்டு வந்துவிட்ட ஆகாய விமானங்கள் போன்ற சாதனங்கள் பெருகியிருக்கும் இக்காலத்தில், ஒரு ஆராய்ச்சிக்கூடம் தொலைவில் இருக்கிறது, அந்நிலை கூடாது. அது அருகில்தான் இருக்கவேண்டும் என்று கூறப்படுமானல், அதில் அறிவுக்குப் பொருந்தும் காரணம் ஏதாவது இருக்கிறதா? என்பதை ஓர்ந்து பாருங்கள். அந்தக் கூற்றில் வடவரின் பொறாமையின் விளைவு தென்படுகிறதே யல்லாமல், உண்மை அறிவின் அடையாளம் எதுவும் காணப்படவில்லை!

குன்னூர், புதுடில்லியிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது என்று காரணங் காட்டப்பட்டு, ஆராய்ச்சிக் கூடத்தை வடநாட்டிற்கு எடுத்துச் செல்ல முயற்சி எடுக்கப்பட்டால், அதே காரணத்தைக் காட்டி, புது டில்லி வெகு தொலைவிலிருக்கிறது. ஆகவே அங்கு அந்த ஆராய்ச்சிக் கூடம் இருக்கக்கூடாது என்று தென்னாட்டவர்சொல்ல மாட்டார்களா? உணர்வுடையோர் உறுதியாகச் சொல்லத்தான் செய்வர்! ஆனல் தன்னுணர்வு - தன்மானமற்றவர்கள் இங்கு ஏராளமாக இருக்கிறார்கள், எதைச் செய்தாலும் அவர்கள் ஏன் என்று கேட்க மாட்டார்கள் என்ற தைரியத்தின் மீது தானே வடநாட்டவர் இந்த அளவுக்குக் கூறவும்-நடைமுறையில் காட்டவும் துணிவு கொள்கிறார்கள்!

தென்னாட்டு மொழி புறக்கணிக்கப்படுகிறது-கலை புறக்கணிக்கப்படுகிறது — சினிமா படங்கள் புறக்கணிக்கப்படுகின்றன - தலைவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்- தொழில்கள் புறக்கணிக்கப்படுகின்றன. -உற்பத்திப் பொருள்கள்புறக்கணிக்கப்படுகின்றன - சித்த வைத்திய முறை புறக்கணிக்கப்படுகிறது - எல்லாவற்றையும்விட, தென்னாட்டு மக்களே புறக்கணிக்கப் படுகிறார்கள்' இப்படிப்பட்ட நிலை தென்னாட்டில். தென்னாட்டில் ஆவடி போன்றவொரு ராணுவ தளவாடதளமோ, குன்னூர் உணவுச்சத்து ஆராய்ச்சிக் கூடம் போன்ற ஒரு ஆராய்ச்சி நிலையமோ இருக்கக் கூடாதென்று வடவர்கள் எண்ணுகிறார்கள். இதில் ஆச்சரியமில்லை! ஆனல் எவ்வளவு கொடுமைகள் இழைப்பினும், அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு உணர்வற்று வாழும் 'தடித்தத் தோலர்கள்' இங்கு தென்னாட்டில் இன்னமும் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்களே என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

தென்னாட்டைப்புறக்கணித்துத் தென்னாட்டிற்குத் தீங்கிழைக்கும் முயற்சிகளுக்கு, இன்னமும் தொடர்ந்து அடிமைப்பட்டிருக்கும் நிலையில் நாட்டை வைத்துக் கொண்டிருப்பது, நல்லறிவு படைத்த-வீர-தன்மானமுடையவர்களுக்கு அழகல்ல! முறையுமல்ல! கடமையுமாகாது! கொடுமையை-தீங்கை முளையிலேயே கிள்ளி எறிய அவர்கள் எக்காலமும் முந்துற வேண்டும்! முந்துற்றால்தான் நாட்டின் எதிர்காலம் நல்லதாக இருக்கமுடியும்.

உணவுச் சத்து ஆராய்ச்சிக் கூடம் குன்னூரிலிருந்து, வடநாட்டிற்கு அகற்றப்படவேண்டிய அவசியமுமில்லை—அவசரமுமில்லை. அதனல்தென்னாட்டவர்க்கு ஆத்திரம்தான் ஏற்படும். அப்படிப்பட்ட ஆத்திர விளைவைதானே தேடிக் கொள்ளாமல், அறிவுடன்பட்ட பாதையில் சென்று, எடுத்துக் கொள்ளவிருக்கும் திட்டத்தை மத்திய அரசாங்கம் கைவிட வேண்டும்! கைவிட முயலுமா!

செயற்கை மழை வரவழைத்தல்

இந்தியா முயற்சி வெற்றி பயக்கவில்லை

செயற்கை மழை வரவழைப்பதற்கான பரிசோதனைகளெவையும் இந்திய சர்க்கார் மேற்கொண்டுவரவில்லையென்பதாக விவசாய மந்திரி தோழர் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் டிசம்பர் 8-தேதியன்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.

கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இப்போது செய்துவரும் சோதனைகள் எப்படி யென்றால், விமானங்களில் மேலே பறந்து சென்று, ஐஸ் கட்டிகளை மேகங்கள் மீது தூவுகிறார்கள் இந்த காரியத்துக்கு விமானங்கள் கடல் மட்டத்துக்குமேல் 17,000 அடிமுதல் 25, 00 அடிவரை உயரப் பறந்தாக வேண்டும். ராயல் இந்திய விமானப் படையினால், இத்தகைய சோதனைகளை நடத்த இயலவில்லை. திருப்திகரமான யந்திர சாதனங்களும் கிடைக்கவில்லை இதர நாடுகளில் கூட, இது பரீட்சார்த்த வேலையாகவே இருந்து வருகிறது. அந்நாடுகளில் இச் செயற்கை மழை துணை கொண்டு பெருத்த அளவில் விவசாய வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவில்லை

"ஆரியமாயை" வழக்கு

திருச்சி டிச. 8—

"ஆரியமாயை" ஆசிரியர் மீது அரசியலார் தொடுத்திருக்கும் வழக்கு, 14-12-49 புதன்கிழமையன்று, திருச்சி சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. நூலாசிரியர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் அன்று கோர்ட்டில் ஆஜராவார்கள்.

பித்தம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போல் பொதிந்துகிடப்பதைக் காணலாம்.

நான்கு பேர்கூடிக்கொண்டு, அமைதி- அகிம்சை என்று மொழிந்துத்தள்ள சமாதான மாநாடொன்றை கூட்டிவிட்டால், உலகத்தில் சமாதானம் தழைத்துவிடாது. உலகில் உண்மைச்சமாதானம் நிலவவைப்பதற்கான வழிகள் வேறு இருக்கின்றன. வல்லரசுகளின் பேராசை, ஏகாதிபத்திய வெறியுணர்வு, நிறக் கொடுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, போட்டி, பொருமை, ஜாதியுயர்வு, ஆதிக்க அகங்காரம் இன்னபிறவே உலகில் நீங்கா பகைமை வித்துக்களை வளர்த்துவருகின்றன. சமாதானம் என்றென்றும் எட்டாக்கனியாகவே இருந்துவரத் துணை செய்துவருகின்றன. இவற்றைக் களைய பாடுபடுவோரே, ஐக்கிய முன்னணி வகுத்துப் பாடுபட முனைவோரே உண்மைச் சமாதான பிரியர்களாவர். அத்தகைய சமாதானப் பிரியர்களைத்தான் இன்று உலகம் வேண்டி நிற்கிறது!

அஸ்ஸாமுடன் நேரடி ரயில் இணைப்பு

ஒன்பதுகோடிரூபாய்த் திட்டம் முடிவுற்றது

ரூ 8 89 46,-04 செலவில் 142½ மைல் நீளமுள்ள மீட்டர் கேஜ் ரயில்வே லயினை போட்டு முடித்து விட்டதாகவும், அஸ்ஸாம் மாகாணத்தை இந்திய யூனியன் பகுதியோடு இணைத்துவிட்டது. இந்த ரயில்வே பாதையில் போக்குவரத்து 1950 ஜனவரி 26-ல் ஆரம்பிக்கப்படுமென்று தெரிகிறது.

இந்திய உபகண்டம் இந்தியா, பாகிஸ்தான் என இரு வேறு நாடுகளாகப் பிரிவண்டதும் அஸ்ஸாமுக்கும் இந்தியாவின் இதர பகுதிக்கும் இடையே, பாகிஸ்தான் டொமினியன் மூலமே யன்றி வேறு மூலமாக ரயில் பாதை இணைப்பு இல்லாதிருந்தது. பிரிவினைக்குப்பின், இந்திய சர்க்காரின் உடனடி முயற்சியால் இப் புதிய பாதை நிருவப்பட்டுள்ளது.

செயற்கை இருதயம் சாத்தியமா?

விரைந்து முன்னேறும் விஞ்ஞானம்!

லண்டன், டிச. 9—

இருதய சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க அமெரிக்காவில் தீவிர ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக 90,00 000 டாலர்கள்ஒதுக்கப்பட்டிருக்கிறது.

செயற்கை இருதயம்அமைப்பதுகூட சாத்தியமா, என்பதும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இருதய நோய்கள் வருவதற்குக் காரணமென்ன, அவைகளை எதைக் கொண்டு குணப்படுத்தலாம் முதலிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

அறிவுக் கதிர்!

மனதைத் தாழ்ந்த இழி கருத்துக்களில் செல்லவிடாமல், உயர்ந்ததொரு இலட்சியத்தில் செலுத்துவது உயர்ந்த சிறந்த ஆண்மையாகும். நல்வாழ்க்கை என்பது எல்லா சமயங்களிலும், இடங்களிலும், நிலையிலும் தவருது ஒரு இலட்சியத்தைப் பின்பற்றவேண்டும் அங்ஙனம் அறிவுடன் இயைந்து பின்பற்றுவதே உயர்ந்த அறிவும், ஆண்மையும் ஒருங்கே அமையப் பெற்றதாகும். எவனெருவன் தனது உண்மை இலட்சியத்தினின்றும் மயிரிழை பிறழாது இருப்பானே அவனே உறுதி உடைய வீரனாவான். இறந்தாலும், தங்கள் செல்வமெல்லாம் இழக்க நேரிட்டாலும் தங்கள் இலட்சியத்தையும், உண்மை தர்மநெறியையும் கைவிடாதவர்களே சிறந்த, உயர்ந்த ஆண்மைபெற்ற வீரர்களாவார்கள்.

—கேப்டன் மாஸ்கா

ஐதராபாத் காங்கிரஸ் தகராறு

சர்தார் தீர்த்து வைத்து விட்டாராம்

கடந்த பதினறு மாதகாலமாக ஐதராபாத் காங்கிரஸ் தலைவர்கள் இருசாராரிடையே புகைந்து வந்த தகராறு, டெல்லியின் பெரு முயற்சியால் டிசம்பர் 8-ந் தேதியன்று பிற்பகலில் தீர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. சர்தார் படேல் தலையீட்டின் பேரிலேயே இந்த சமரசம் சாத்தியமாயிற்றும். சுவாமி ராமானந்த தீர்த்தரும், எதிர் சார்புத் தலைவர் தோழர். பி. ராமகிருஷ்ணராவும் 8-ந் தேதியன்று சர்தார் படேலுடன் கூட்டுபேட்டி கண்டனராம். ஸ்தானிக காங்கிரஸ் தலைவர் தேர்தல் சம்பந்தமாக ஒரு முடிவேற்பட்டதென்றும், தோழர் திகாம்பர் சிங் என்பவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெறும் வகையில், ராமானந்தரும் ராமகிருஷ்ணராவும் போட்டியிலிருந்து வாபஸ் பெறவேண்டுமென, சர்தார் பட்டேல் பணித்தாரென்று தெரிகிறது.

உற்பத்திப் பெருக்கத்துக்குத் துணைசெய்யா ஆலைகள்

உற்பத்திப் பெருக்க வேலைகளிலீடுபடாது, வரிசெலுத்தி வரும் நூலாலைகளையும், அல்லது வேறு எந்தத் தொழிற்சாலைகளையும் சர்க்காரே ஏற்று நடத்துவதற்கு அதிகாரத்தை வழங்கக்கூடிய சட்டமொன்றை இந்திய சர்க்கார் தயாரிக்கப் போகிறதாகவும், இன்னும் ஒரு சில வாரங்களில் அச்சட்டம் அமுல் பெறலாமென்றும் பம்பாய் தொழில் மந்திரி தோழர் குல்ஜரிலால் நந்தா வெளியிட்டார்.

பம்பாயில் நெசவுத்தொழிலே பெருந்தொழிலாக நடைபெற்று வருகிறதென்றும், பம்பாய் மாகாணத்திலுள்ள மொத்த நெசவாலைகள் 200-ல், 15 மில்கள் சுத்தமாய் மூடப்பட்டிருப்பதாகவும், 20 மில்கள் அரைகுறையாய் வேலை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்நிலைமையால் 29,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனரென்றும் மந்திரி தெரிவித்தார்.

நாங்கள் உண்டாக்கிய சூழ்நிலைதானே உங்களுக்கு ஆதரவளிக்கிறது?

எங்களால் விளைந்த தீமைதான் என்ன?

தடை செய்யும் நூல்களுக்கு மறுப்பு எழுத தைரியமில்லையா?

மதுரையில் தோழர் நெடுஞ்செழியன்

மதுரை, டிச. 5—

4-12-49 மாலை 7 மணிக்கு தி. மு. கழகம்-மதுரைக் கிளையின் சார்பில், மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, சுமார் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள், மாணவர்கள், உள்ளூர், வெளியூர்த் தோழர்கள் உள்பட கூடியிருந்தார்கள். கூட்டத்திற்கு, தி. மு. கழகம் மதுரை மாவட்டக் கிளைச் செயலாளர் தோழர் டி. ஆவுடையப்பன் அவர்கள் தலைமை வகித்து முகவுரையாகச் சில வார்த்தைகள் பேசினார்.

கே. ஏ. மதியழகன்

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் இன்றைய அரசியலாரின் போக்கைக் கண்டித்தும், திராவிட நாடு தனித்து வாழ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்கள் பொது மக்கள் யாவரும் தி.மு.கழகத்தில் சேர்ந்து தொண்டாற்றுமாறு கேட்டுக் கொண்டும் சுமார் முக்கால் மணி நேரம் வரை அழகாகவும் ஆணித்தரமாகவும் அரிய ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அடுத்தபடியாக, நீண்ட நாட்களாய் நம் இயக்கத்திற்குப் பணியாற்றியவரும், கொள்கையில் நீங்காப் பற்றும், உறுதியும் வாய்ந்தவரும், தி. மு. கழக ஊழியர்களில் ஒருவருமாகிய மதுரை தோழர் எம். பட்டினம் அவர்கள், எதிர்பாரதவிதமாய் அகால மரணமடைந்தது குறித்து தோழர் எஸ், முத்து அவர்கள் ஓர் அனுதாபத தீர்மானத்தைக்கொண்டுவந்து, அன்னாரின் கொள்கைப்பற்று குறித்துச் சிறிது நேரம் பேசினார்.

இரா. நெடுஞ்செழியன்

அதன்பின், நீண்ட கைதட்டலுக்கிடையே, மத்திய தி. மு. கழகப் பிரசாரக குழு செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சுமார் இரண்டு மணிநேரம் உணர்ச்சி ததும்பப் பேசினார். அதன் சுருக்கம் வருமாறு:—

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! இந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. உலக நிலையிலே ஒரு மாறுதல், தேசத்திலே ஒரு மாறுதல். நம் நாட்டைப் பொறுத்தும் சில மாறுதல், நம் கழக நிலையிலும் மாறுதல் என் தோற்றத்திலும் ஒரு மாறுதல். உலக நிலையிலே ஏற்பட்ட மாறுதலுக்கு யுத்தம் முடிந்தது காரணம் தேசத்தில் ஏற்பட்ட மாறுதலுக்கு சுதந்திரம்அடைந்தது காரணம், நாட்டிலே ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்கு, இந்நாட்டு ஆட்சியாளர்களின் போக்கு காரணம். கழகத்திலே ஏற்பட்டுள்ள மாறுதலுக்குத் தலைவர் செய்து கொண்ட ஏற்பாடு காரணம், என் தோற்றத்திலே ஏற்பட்ட மாறுதலுக்கு விருப்பம் காரணம்.

பிரிவினைக்கு பயமா காரணம்?

நம்முடைய கொள்கைகளைப் பற்றிக் கூறும் பொழுது நம்மைக் குறுகிய நோககம் படைத்தவர்கள் என்று கூறுகிறார்கள் காமராஜர் மட்டும் என்ன. ஓரே பரந்த நோக்கம் உடையவரா? உலகத்திலுள்ள எல்லா மக்களும் ஒன்றுதான் என்று கருதுகிற அளவுக்கு, விரிந்த நோக்கம் படைத்தவரா? நாம் திராவிட நாடு கேட்பதைக் குறுகிய நோக்கம் என்று கூறுகிறவர்கள், பாகிஸ்தானைப் பிரிப்பதற்கு, எப்படி உடன் பட்டார்கள்? பாகிஸ்தானைப் பிரிப்பதற்கு அவர்கள் மனப்பூர்வமாக சம்மதிக்கவில்லை என்று கூறினால், பாகிஸ்தானைப் பிரிப்பதற்கு ஜின்னாவிடம் கொண்டிருந்த பயமாகாரணம்? எங்களுக்கு ஒரு தனி நாடு தேவை என்று கூறினால்வெள்ளைக்கார தாசர்கள் என்று கூறுகிறார்கள்! ஒரு பக்கம் தி. மு. கழகத்திற்கு ஆதரவில்லை என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால் போகுமிடமெல்லாம் நாங்கள் வெள்ளைக்கார ஆட்சியை நிலை நிறுத்தியவர்கள் என்று பிரசாரம்செய்கிறார்கள்.இரண்டும் எப்படி பொருந்தும்?

யார் தாசர்கள்?

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், ஜஸ்டிஸ் கட்சி பதவி வகித்தது என்ற ஓரே காரணத்திற்காக, நாங்கள் வெள்ளைக்காரதசர்கள் என்று கூறினால், அதே வெள்ளையர் ஆட்சியில் ஆச்சாரியார் மந்திரியாக இருந்தாரே! அதற்கென்ன சொல்வது? ஆம் ஜார்ஜ் மன்னருக்கு ராஜ விஸ்வாசப் பிரமாணம் கூறி, ஆச்சாரியார் மந்திரி சபை பதவி வகிக்கவில்லையா? அவர்களெல்லாம் வெள்ளைக்கார தாசர்களில்லையா? அதே வெள்ளையர் ஆட்சியில் காங்கிரசுலீகும்-ம் சேர்ந்து மத்திய சர்க்காரில் இடைக்கால மந்திரிசபை அமைத்தனரே! அந்த நேருவின் இடைக்கால மந்திரிசபை ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்யவில்லையா! வெள்ளைக்கார தாசர் என்று நீங்கள் கூறிவந்த டாக்டர் அம்பேத்காரை உங்கள் மந்திரிசபையில் ஏன்வைத்திருக்க வேண்டும்? அவர் இன்னு காங்கிரசில் சேரவில்லையே! அப்படிப்பட்டவரைக் கொண்டு எதிர்கால இந்திய அரசியலுக்கு சட்டம் வகுக்கும்படி ஏன் செய்யவேண்டும்? அந்த அளவுக்கு உங்களிடம் அறிவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதாகத்தானே கூற முடியும்? ஆர் கே. ஷண்முகம், கோபால்சாமி அய்யங்கார் ஜான்மத்தாய், சாட்கில் ஆகியோரெல்லாம் காங்கிரஸ் அங்கத்தினராகவில்லையே! காங்கிரஸ்காரர்கள் கருத்துப்படி அவர்கள் எல்லாம் வெள்ளைக்கார தாசர்களில்லையா?

'சாமி'க்குப் பதில் 'மிஸ்டர்'

எதிர்க்கட்சிதானே ஆளும் கட்சியின் குற்றங்களை எடுத்துக் காட்டித் திருத்தமுடியும் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியை வைத்து நடைபெறும் ஆட்சிதானே உண்மையான ஜனநாயக ஆட்சியாகும். இந்நாட்டின் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகின்ற அத்தனை பேருக்கும் அரசாங்கத்தின் குற்றத்தை எடுத்துககூற உரிமையுண்டு. அதுதான் உண்மையான ஜனநாயக ஆட்சி. நாங்கள் குற்றம்கூறினால், எங்களுக்கு இது தான் வேலை யென்று காமராஜர் கூறுகிறார். இந்த நாட்டிலுள்ள உயர்வு தாழ்வுக் கொடுமைகளை ஒழிப்பதற்காக, மனிதனை மனிதனாக மதிக்கும் உணர்ச்சியை உண்டாக்கியவர்கள் நாங்கள் அல்லவா? நாங்கள் உண்டாக்கி வைத்த அந்த உணர்ச்சியின் ஆதரவில் தானே நீங்கள், தீண்டாமை விலக்குச் சீர்திருத்தங்களைச் செய்ய முடிந்தது? நாங்கள் வகுட்புத் துவேஷத்தை வளர்க்கிறோம் என்று கூறுவது பொருந்துமா? நாங்கள் செய்த வகுப்புத் துவேஷப் பிரசாரத்தால் எந்தப் பார்ப்பனருக்கு என்ன தீமை ஏற்பட்டது? ஹோட்டலில் சென்றால் "சாமி" என்று அழைப்பதற்குப் பதில் "மிஸ்டர் ஒரு காபி கொடுங்கள்" என்று கேட்கும் நிலையை உண்டாக்கியிருக்கிறோம். இதைத் தவிர தீமை என்ன ஏற்பட்டது?

உயர் நீதி மன்றம் கூறிற்றே உண்மைப் பணி நமதென்று!

வேறொரு ஆட்சியாக இருக்குமானால், எங்களுடைய கட்டை விரலை வாங்கியிருக்கும், என்று காமராஜர் கூறுகிறார். இந்தக்காருண்ய மிகுந்தவர்கள் ஆட்சி என்னதான் செய்யவில்லை? 'கட்டை விரலை நறுக்குவது ஒன்றுதான் இவர்கள் செய்யாமல் விட்டது. இவ்வளவு தூரம் நம்மைத் தாக்குவதையே வேலையாகக் கொண்ட காமராஜரை யார் மதிக்கிறார்கள்? காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் கொடுக்க வேண்டிய மரியாதையை, காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர்கள், பார்ப்பனப் பத்திரிகை ஆசிரியர்கள் கொடுக்கிறார்களா?

வகுப்புத் துவேஷத்தை வளர்த்தது, பார்ப்பனர்களைத் தாக்கியது என்ற காரணம் கூறி, "திராவிட நாடு" பத்திரிகைக்கு 3000 ரூபாய் ஜாமீன் கேட்டது இன்றைய ஆட்சி. அதை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் மனுச்செய்து கொண்டதில் "திராவிட நாடு ஆசிரியர்" பார்ப்பனர்களைக் கண்டிக்கவில்லை, பார்ப்பனீயம் என்ற முறையைத் தான் கண்டிக்கிறார் என்று. நீதிபதி டஞ்சாபி கேச அய்யர் கூறினார். ஜனநாயக ஆட்சி என்றால், தோழர் அண்ணாத்துரை எழுதிய "இலட்சியவரலாறு" "ஆரியமாயை" போன்ற நூல்களுக்கு மறுப்பு எழுதி வெளியிட்டுமே இன்றைய ஆளவந்தார்கள் இராவண காவியத்தில் உள்ள குற்றம் இன்னது என்று அதில் உள்ள ஒரு கவிதையை எடுத்து விளக்கிக் காட்ட, இன்றைய மந்திரிகளுக்கு ஆற்றல் உண்டா? கம்பர் எழுதியதைப்போல ஆபாசமான பாகம் இன்ன இடத்தில், இன்னது இருக்கிறது என்று எடுத்துக்காட்ட முடியுமா?

ஆணவம் இருக்கிறது; ஆண்மையிருக்கிறதா?

பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் எழுதி, பதினைந்து ஆண்டுகள் நூல் வடிவில் உலவி, பல மேடைகளில் நடித்துக் காட்டப்பட்ட "இரண்யன் அல்லது இணையற்ற வீரன்" என்னும் நாடகத்தை, இந்த மகானுபாவர்கள் ஆட்சிக்கு வந்த பின் தடை செய்துவிட்டார்கள். நேர்மைதானா?

இந்த 1949-ம் ஆண்டில் கூட கார்த்திகைக்குத் திருப்பரங்குன்றம் செல்லும் கூட்டம்இரயிலில் இடம் கொள்ளவில்லை இதை எடுத்துக்கூறிச் சீர்திருத்த எங்களைத் தவிர யார் இருக்கிறார்கள் இந்த நாட்டிலே? சுமார் 27 ஆயிரம் கோயில்கள், 25 ஆயிரத்துக்கு மேல் சத்திரம் சாவடிகள். 3000 மடங்கள் இருக்கின்றன இம்மாகாணத்தில் என்று. ஓமந்தூரார் கணக்குக் காட்டினார். இவைகளின் வருமானம் சுமார் 10 கோடி ரூபாய்! இவைகளை எடுத்து, இந்நாட்டின் நலனுக்குச் செலவு செய்ய ஆளவந்தார்களுக்குத் தைரியம் இருக்கிறதா? நேரம் இருக்கிறதா?

குஷ்ட ரோகியைத் தாசி வீட்டுக்குத் தூக்கிச் சென்ற பதிவிரதை கதை, நிர்வாணத்துடன் எண்ணை தேய்க்கும் தாராசசாங்கம் நூல் வடிவில் உலவுகிறது. நாடக மேடைகளில் நடிக்கப்படுகிறது. இவைகளைத் தடை செய்ய எண்ணம்வரவில்லை, இராவண காவியம் தடை செய்யப்படுகிறது. இது முறைதானா?

களங்கத்தைக் கண்டிப்பதா கயமைப் போக்கு?

ஆட்சியைப்பற்றி நாங்கள் குறை கூறுகிறோம் என்று ஆளவந்தார்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட ஆட்சியைக் குறை கூறாமல் எப்படிஇருக்க முடியும்? களங்கம் இருக்கிறது. ஆகவே அதனைச் சுட்டிக் காட்டுகிறோம். அதில் என்ன தவறு?

திராவிடநாடு பிரிவினை கேட்பவர்களைக் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டும் என்று மந்திரி மாதவமேனன் கூறுகிறார். கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டியவர் மந்திரியாரே நாங்களல்ல, என்பதை அறிவுலகம் எடுத்துக் கூறுமே?

75 லட்சம் ஜனத் தொகை கொண்ட ஆஸ்திரியாவும், மிகச் சிறிய நாடு போர்ச்சுக்கலும் தனி நாடாக இருக்கும் போது, 5 கோடி மக்களைக் கொண்ட திராவிடம் தனி நாடாக இருக்க முடியாதா?

தனியரசு கேட்பதில் தவறென்ன?

வருகிற புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வருமானால், எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காருக்கே போய் விடுகின்றன. காப்பிக்கு வரி தேயிலைக்கு வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி, தபால் வரி, வருமான வரி, இரயில் கட்ட

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

சென்னை மாவட்ட
தி. மு. கழக மாநாடு
★
15-1-1950 ஞாயிறன்று
சென்னையில்
சிறப்பானமுறையில் நடைபெறும்
★
அன்று இரவு
சி. என். ஏ. எழுதிய நாடகம்
நடித்துக்காட்டப்பெறும்
★
முழு விவரம் பின்னால்

நாங்கள் உண்டாக்கிய . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ணம் போன்ற பலதரத்தக்க வரிகள் மத்திய சர்க்காருக்கு போய்விடுகின்றன. அதிலிருந்து சென்னை மாகாணத்திற்கு அவர்கள் கொடுக்கும் பணம் சுமார் ஆறில் ஒரு பங்கு ரூபாய் தான். இதைக் கேட்டால் மத்திய சர்க்காரிடம் இராணுவம் இருக்கிறது, அதற்குச் செலவு செய்யப் பணம் வேண்டும் என்று கூறுகிறார்கள். கூர்க்கரும் பஞ்சாபிகளும் நிறைந்திருக்கும் இராணுவத்திற்கு நமது பணம் ஏன் போக வேண்டும்? இந்த நாட்டின் யுத்த பரம்பரையினரைக் கொண்டு ஒரு இராணுவம் அமைக்க முடியாதா? திராவிடம் தனியாகப் பிரிந்தால் அந்நிலை ஏற்படும் அல்லவா? இதைக் கூறினால் நாம் குறுகிய நோக்கம் கொண்டவர்கள் என்று காமராஜர் உள்பட மட்டரகக் காங்கிரஸ்காரர் வரை கூறுகிறார்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடுகளும் தங்கள் நாட்டின்மீது கொண்டுள்ள அபிமானத்தை ஒழித்து, எல்லோரும் மனிதர் தான் என்ற உண்மையை ஒப்புக்கொண்டு தங்கள் தங்கள் நாடுகளின் எல்லைக்கோடுகளை அழித்துவிட்டு, வெண்டல் வில்கி கூறியதுபோல், ஒரே உலகம் காண முன்வருவார்களானால், அப்போது நாமும் நமது திராவிடநாட்டின் எல்லைக்கோட்டைஅழித்துவிட்டு, நாமும் மனிதர் என்று கூற முன்வந்து விடுவோம். ஒவ்வொரு நாட்டினருக்கும் தங்கள் நாடு என்ற உணர்ச்சியும், அது தனித்து வாழவேண்டும் என்ற எண்ணமும் இருக்கும் வரைக்கும், திராவிட மக்களாகிய நமக்கும், நம்நாடு திராவிடம் என்ற உணர்ச்சியும், அது தனித்த சுதந்திர ஆட்சியாய் மிளிர வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படுவதில் தப்பென்ன இருக்கிறது! இந்தியா ஒரே ஆட்சியில் இணைந்திருப்பதால் வடநாட்டுக்குத் தென்னாடு அடிமை என்பதைத் தவிர வேறென்ன இருக்கிறது?

நிலையக் குறிப்பு மட்டுமல்ல; நம் மொழி நிலை படப்பிடிப்பு!

மொழியை எடுத்துக்கொள்ளுங்கள், தாய்மொழி, நல்ல இலக்கிய வளம் நிறைந்த மொழி தமிழ் இருக்க, விஞ்ஞான அறிவுக்கும், உலகத் தொடர்புக்கும் ஆங்கிலம் இருக்க, இந்தி எதற்கு? தாய்மொழி பயிலாத கோடிக் கணக்கான மக்கள் இருக்கும் போது, இந்தியைக் கட்டாயமாகப் புகுத்துவது எதற்கு? இரயில்வே நிலயங்களில் இந்திக்கு முதலிடம், ஆங்கிலத்திற்கு அடுத்த இடம், தமிழுக்குக் கடைசியிடம் கொடுத்திருப்பதிலிருந்தே நாம் வடநாட்டாருக்கு எவ்வளவு தூரம் அடிமைகளாய் இருக்கிறோம் என்பது விளங்குகிறதே! இந்நாட்டின் நன்மைக்கு எது செய்ய வேண்டுமென்றாலும், டில்லிக்குப் போகிறார்கள் இந்நாட்டு மந்திரிகள். பாகிஸ்தான் தனியாய் இருப்பதால் தான், தனது நாணய மதிப்பைக் குறைத்துக்கொள்ளமுடியாது என்று, தைரியமாய்ச் சொல்ல முடிந்தது. ஆகவேதான் எல்லா வளமும் செறிந்த திராவிடநாடு தனியாகப் பிரிந்தால் இன்பவாழ்வு வாழமுடியும் என்று நாங்கள் கூறுகிறோம்" என்று மற்றும் பல அரிய விஷயங்களை எடுத்துக் கூறினார். கூட்டம் இரவு 10-30 மணிக்கு முடிவுற்றது. ஆரம்ப முதல் கடைசிவரை கூடியிருந்த பொதுமக்கள் உணர்ச்சியும், உற்சாகமும் ததும்ப சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர். பின்னர் தலைவர் முடிவுரை கூறத் தோழர் எஸ். முத்து அவர்களால் நன்றி கூறப்பட்டு, கூட்டம் இனிது முடிந்தது. இடையே காலிகள் சிலர் மறைவிலிருந்து கல் வீசிக் கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க நினைத்தும் மக்கள் மனங்குலையாமலும் நிலை குலையாமலும் இருந்து, அமைதியாக நடந்துகொண்டது மிகவும் போற்றுதற்குரியதாகும். (வி-உ)

செக். மந்திரி 'டிஸ்மிஸ்'!

வியன்னா, டிச. 9—

செக்கோஸ்லோவேகியாவின் அயல் நாட்டு வர்த்தக இலாகா மந்திரி தோழர் லோபின் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார் என்பது உத்யோகபூர்வமாக உறுதியாகியிருக்கிறது.

நவம்பர் 25-ல் இவருடைய பதவிக்கு சீட்டு கிழிக்கப்பட்டதாம்.

அமெரிக்காவிடமிருந்து கடன் உதவி பெறுவதற்காக இவர் இவ்வாண்டு ஆரம்பத்தில் அனுப்பப்பட்டார். ஆனால் காரியம் முடியாமல் வெறுங்கையுடன் திரும்பி வந்தார். வந்தது முதற்கொண்டே இவர் மீது சந்தேகம் இருந்து வந்தது. அவர் மேனாட்டினருடன் அதிகமாக குலாவுகிறார் என்பது கம்யூனிஸ்டுகளின் புகார்.

இம் மந்திரி, சிறையில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு அவர் தற்கொலை செய்து கொண்டுவிட்டார் என்றும் வதந்திகள் இருந்து வருகின்றன. - ரூடோர்

பாலஸ்தீன பிரிவினை பற்றி இராக் பிரதிநிதி கருத்து

லேக்ஸக்ஸஸ், டிச. 9—

பாலஸ்தீன பிரிவினை மிகவும் அநீதி என்பதை, அட்ஹாக் கமிட்டி முன்பு, இராக் பிரதிநிதி டாக்டர் ஜமாலி வற்புறுத்தி கூறியிருக்கிறார். பாலஸ்தீனத்தில் அமைதி என்பது இன்னு ஏற்படாதவில்லை என்றும் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:- ஜெருசலம் பிரதேசத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றால் அகதிகள் பிரச்சினை முதலில் தீர்க்கப்படவேண்டும். பாலஸ்தீனத்தின் இருதயம் போல் ஜெருசலம் அமைந்திருக்கிறது. ஆகவே பாலஸ்தீன பிரச்னை எப்படி தீர்க்கப்பட்டாலும் ஜெருசலம், அரபு நகரமாகவே இருக்கும்படி ஏற்பட [illegible]

நாட்டு நடப்பு

தமிழ்த் தொண்டர் கழகம்

கோவை, டிச. 5—

3—12—49 அன்று கோவைத் தமிழ் இல்லத்தின் சார்பில் பொன்னி பரமேசுவரி பள்ளிக் கட்டிடத்தில் ஓர் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. உலகம் சுற்றும் தமிழன், குமரிமலர் ஆசிரியர் ஏ. கே. செட்டியார் அவர்கள் தனது மேல் நாட்டுப் பிரயாண அனுபவங்களை வெகு அழகாக எடுத்துக் கூறினார்கள்.

* * *

ஓட்டல் தொழிலாளர் சங்கம்

சேலம், டிச. 7—

4—12—49 ஞாயிற்றுக்கிழமை இரவு 9½ மணிக்கு ஓட்டல் தொழிலாளர் சங்கத் தலைவர் கே. விசுப்பாராவ் அவர்களின் தலைமையில், பேக்டரி சட்டத்தை எதிர்க்கும் முறையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது பேக்டரி சட்டத்தை எதிர்த்து தோழர்கள் எஸ். ஏ. நாராயணன், எம். எஸ். கிருஷ்ண மூர்த்தி எச், கிருஷ்ணமூர்த்தி எம். விஸ்வநாதன் முதலியவர்கள் சொற்பொழி செய்த பின், பத்து பேருக்குமேல் வேலை செய்யும் ஹோட்டல்களில் பேக்டரி சட்டம் அமுலிருப்பதை விலக்களித்து ஷாப் சட்டத்தின் கீழ் மீண்டும் அமுல்நடத்த வேண்டுமாய் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிறகு பொதுச் செயலாளர் எல். என். விசுவநாதன் நன்றி கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது. (ஓ-நி)

* * *

அச்சுத்தொழிலாளர் சங்கம்

திருச்சி, டிச. 5—

30—11—49ல் நடந்த டை சங்க உறுப்பினர்களின் பேரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

17—12—47ந் தேதிய அச்சக முதலாளிகள் அச்சுத் தொழிலாளர் சங்க ஒப்பந்தத்திற்கு மாறாகத் தொழிலாளர்களிடம் அநீதியாக நடந்துகொண்ட அச்சகங்களின் மீது சங்கத்தாரால் தொழில் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்ட 15—5—48ந்தேதிய ரிப்போர்ட்களை மீண்டும் விசாரணை செய்வதாக அரசியலாரால் நியமிக்கப்பெற்ற தொழில் கோர்ட்டாரின் நடவடிக்கையை வரவேற்பதுடன். உடன்டியாக இதை விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நீதி வழங்கும்படி அரசியலாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது'.

* * *

மறுமலர்ச்சி நடிகர் மன்றம்

பம்பாய், டிச. 7—

மக்களின் அறிவுவளர்ச்சிக்குரிய சமூக நாடகங்களை நடத்துவதோடு நடிப்புக் கலையிலும் இசைக்கலையிலும் தேர்ச்சி பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் 1-12-49 வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு லேபர் வெல்பேர் சென்டரில் தோழர் எம். செல்லதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 'மறுமலர்ச்சி நாடக மன்றம்' என்ற ஒன்று நிறுவப்பட்டது. பின்பு மன்றத்தின் நிபந்தனைகளை எல்லோரும் ஒப்புக்கொண்டபின், தோழர் டி. சாமுவேல் அவர்களை மன்றத்தின் மானேஜிங் டைரக்டராகவும், தோழர் பி. ஆறுமுகம் அவர்களை நாடக டைரக்டராகவும், தோழர்கள் வி. எச். சோமசுந்தரம் ஆர். ராஜா, கே. ஏ. சற்குணம் ஆகியோரை உதவி நாடக 'டைரக்டர்' களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. மன்றத்தின் ஆரம்பவிழாவை ஜனவரி மாதத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, தோழர் டி. சாமுவேல் நன்றி கூற கூட்டம் இரவு 11-30 மணிக்கு இனிது முடிந்தது. (ஓ-நி)

* * *

கிராமப் பொதுக்கூட்டம்

பச்சாபாளையம், டிச. 7—

பச்சாபாளையம் தோழர்கள் ப. உ. அய்யாசாமி, நஞ்சப்பன், ரங்கசாமி ஆகியோரின் முயற்சியால், 4-12-49-ல் ஓர் பொதுக்கூட்டம் நடந்தேறியது. கூட்டத்திற்குத் தோழர் ப. உ. அய்யாசாமி தலைமை வகித்தார். குனியமுத்தூர் தோழர் த. மாணிக்கம், செல்வபுரம் தோழர்கள் ஆதிசிவம், கு. திருமூர்த்தி, வீரமணி, பச்சாபாளையம் தோழர் நஞ்சப்பன் கோவை உயர்நிலைப்பள்ளி மாணவர் சு. ஆறுமுகம், சுண்டக்காமுத்தூர் தோழர் சு. குதாண்டவன் ஆகியோர் இன்றைய நாட்டின் நிலைமை பற்றியும், கிராம சீர்திருத்தம்பற்றியும், கிராம மக்களின் ஒற்றுமைபற்றியும் வெகு விரிவாக எடுத்துரைத்தனர்.

கூட்டத்திற்குகிராமமக்கள்ஏராளமாக வந்திருந்தனர். பிறகு நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

* * *

மோட்டார் தொழிலாளர் சங்கம்

திருப்பூர், டிச. 7—

24-11-49-ந் தேதி இரவு 7-30 மணிக்கு பொள்ளாச்சி மோட்டார் தொழிலாளர்சங்க த்தலைவர் எம். சுப்பையா அவர்கள் தலைமையில் கூடி, திருப்பூர் மோட்டார் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது. டை சங்கத்திற்கு என். எம். நரசிம்மபாபு அவர்களைத் தலைவராகவும், தோழர் லட்சுமணனை செயலாளராகவும் மற்றும் 9 பேர் நிர்வாகக்குழு அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

வ. உ. சி. கழகம்

இன்று மாலை 7-மணியளவில் திருப்பூர் காதர்பேட்டையில் தோழர் மணிவண்ணதாசர் மொஹிதின் தலைமையில் ஓர் கூட்டம் கூடி "வ. உ. சிதம்பரனார் வாலிபர் கழகம்" நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டது. டை கழகத் துவக்கவிழாவைப் பொதுக்கூட்டமாக கோ. [illegible] ஜி. என் இராசு, ஈரோடு எஸ். அப்பாவு ஆகியோரைக்கொண்டு நடத்துவது என்றும், டை கழகம் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட முன்னேற்றக் கொள்கையைக் கடைபிடிப்பதென முடிவுசெய்து, கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்— தோழர் மொஹமூ; பொருளாளர்- சிக்கந்த; வினயா உதவியாளர்- வி. பொன்னு; உறுப்பினர்கள்- காதர் மொஹிதின் (மணியம்), ஜெகதீசன், பாபா, சஞ்சிவி, அ. முகம்மதலி, ஜி. வி. முத்து, டி. நடராஜ், கோவிந்தராஜ்.

* * *

பெற்றோர் சங்க ஆண்டுவிழா

வேட்டைக்காரன்புதூர், டிச. 8—

இவ்வூர் உயர்தரப் பள்ளியின் பெற்றோர் சங்க ஆண்டுவிழா 4—11—49ல் நடைபெற்றது. அதுபோது இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில் பேச்சுப் போட்டி யொன்று நடைபெற்றது. இதில் பல பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர். தோழியர் அம்மணியம்மாள் முதல் பரிசும், தோழர் சிவ. சுப்பிரமணியம் இரண்டாவது பரிசும் தோழியர் பெரியநாயகம் மூன்றாவது பரிசும் பெற்றனர்.

* * *

திருக்குறள் குழு

சின்னபுட்சிரி, டிச. 7—

சின்னபுட்சிரி திருவள்ளுவர் அறநிலையத்தில், 4-12-49 அன்று மாலை தோழர் சீதாராமரெட்டியார் தலைமையில் கூட்டமொன்று நடந்தது. அரசாங்கம் திருக்குறளைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்து அரசாங்கத்தாருக்கு அறிக்கைக் கொடுக்கப்பட்டது. தைத் திங்களில் "பொங்கல் மலர்" வெளியிட தீர்மானிக்கப்பட்டது.

* * *

வ. உ. சி. நினைவு நாள்

தாத்தையங்கார்பேட்டை, டிச. 8—

இவ்வூர் உயர்நிலைப் பள்ளியின் மாணவர் இலக்கியக் கழகச்சார்பில் சென்ற 1-12-49-ம் நாள் வியாழக்கிழமை மாலை 3½ மணிக்கு கப்பலோட்டிய தமிழன் "வ. உ. சியின் நினைவு நாள்" ஆசிரியர் டி. எஸ். ராமமூர்த்தி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அதுபோது அவர் இந்நாட்டுக்குச் செய்த தொண்டு, அதனால் அவர் அடைந்த அல்லல்கள், அவரது நினைவுநாள் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியம் ஆகியவைகளைப்பற்றி மாணவர்கள் ஆர். பாஸ்கரன், பி. ராமலிங்கம், பி. பெரியசாமி ஆகியோரும், ஆசிரியர் சிலரும் சொற்பொழிவாற்றினார்கள். விழா மாலை 5½ மணிக்கு இனிது முடிவுற்றது.

" சிறுகச்சிறுகக் கொடுக்கலாமே "

லண்டன், டிச. 8—

லண்டனில் உள்ள விஷயமாக சர். கிரிப்ஸ் நேற்று பார்லிமெண்டில் சர்க்கார் கொள்கையைத் தெளிவாக்கிய பின் அதைப் பற்றி பல அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கின்றன. எதிர் கட்சியினர் தங்கள் வழக்கமான 'கடனை ஏற்படவேண்டும்' என்பதை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

'எகனமிஸ்ட்' பத்திரிகையில் செசாட்டென்மன் எழுதியுள்ள கட்டுரையில், கடனைத் தீர்த்ததாகக் குறைப்பது நடக்காத காரியம் என்றும் சிறுகச்சிறுகக் கொடுப்பதல் தவறு எதும் இல்லை என்றும் எழுதியிருக்கிறார்

திருமணம்

சாத்தொழுவு, டிச. 3—

1—12—49 உ காலை 10 மணி அளவில் கணியூருக்கு அடுத்த சாத்தொழுவு கிராமத்தில் கணியூர்— திராவிட முன்னேற்றக்கழகச் செயலாளர் தோழர் கே. ஏ. முருகேசம் அவர்கள் தலைமையில் முருகன்-குப்புத்தாயி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணவிழாவிற்கு ஏராளமானவர்கள் வந்திருந்தனர். தோழர்கள் ஏ. துரைசாமி, சி. வி. என். ரத்தினம், எம். உதுமான், ஆகியோர்கள் 'சீர்திருத்த திருமணம்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினர். தலைவர் முடிவுரை கூறியபின், மணமகளின் தந்தை தோழர் டி. முத்துசாமி, அவர்கள் நன்றிகூற மணவிழா பகல் 12-30 மணிக்கு முடிவுற்றது. மாலை 4 மணிக்கு என். எஸ். கே. கோஷ்டியைச்சேர்ந்த தோழர் கே. ஆர். செல்லமுத்து பார்ட்டியாரால் ஓர் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது. (ந-நி)

* * *

கணியூர், டிச. 7—

2-12-49-ந் தேதி காலை 10-மணிக்கு கணியூர் விக்டரி மில்ஸ் காம்பவுண்டில் அழகுற அமைக்கப்பட்டிருந்த பந்தலில் டையூர் தி. மு. கழக துணைச்செயலாளர் தோழர் கே. என். அங்கமுத்து— சுப்பம் திருமணம் தோழர் நா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடந்தேறியது மணவிழாவிற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் ஏராளமான இயக்கத் தோழர்களும் பொதுமக்களும் வந்து குழுமியிருந்தனர். தலைவர் நெடுஞ்செழியன் அவர்கள் சீர்திருத்தத்திருமணத்தின் நோக்கத்தைப்பற்றிமுன்னுரையாற்றியபின், மணமக்கள் மணம் முடித்துக்கொண்டனர். பின்பு தோழர்கள் கே. ஏ. மதியழகன் மணமக்களுக்கு வாழ்த்து கூறும் முறையில் சிறிதுநேரம் பேசினர். பின்பு தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் சீர்திருத்தத் திருமணம் ஏன் செய்கிறோம் என்பதைப்பற்றி நகைச்சுவை ததும்ப அரியதொரு சொற்பொழிவாற்றினர். பின்பு தலைவர் உணர்ச்சி ததும்ப தனது முடிவுரையை கூறி முடித்தார். மணமக்களுக்கு, பலரால் வாழ்த்துப் பத்திரங்களும், பரிசுகளும் வழங்கப்பட்டு மணமகனால் நன்றி கூறப்பட்டு மணவிழா பகல்1-மணிக்குமுடிவுற்றது.

[இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் நன்றி—ஆ-ர்]

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

11—12—49

செய்யூர் :— என். வி. நடராசன், எம். சின்னையா.

தஞ்சாவூர் :— இரா. நெடுஞ்செழியன்.

கோவை :— க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி.

கல்லாரப்பட்டி:— என். முத்து, எம். டரமசிவம், ச. அங்குசாமி.

12—12—49

காங்காயம்:— க. அன்பழகன், கா. வெ முத்தியாலு.

இனி நடப்பவை

சென்னை :— வில்லிவாக்கம் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம், 11—12—49 ஞாயிறு மாலை 7 மணியளவில், ஒற்றைவாடைத் தெரு 12 எண்ணுள்ள இல்லத்தில நடைபெறும். மேற்படி கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வந்து கலந்து கொள்ளும்படி, விளம்பர உறுப்பினர் தோழர் திரு. மதிவாணன் அறிவிக்கிறார்

• • •

சென்னை:—மயிலாப்பூர் தி. மு கழகக் கிளையின்மாதாந்திரசிறப்புக் கூட்டம், 10-12-49 இரவு 7-30 மணிக்கு மயிலை அங்காளதபுரம் வீதி 1-10 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். அதுபோது அண்மையில் நடந்த மாவட்டக் கிளைத் தேர்தல்பற்றியும், நடைபெறவிருக்கும் மாநாடு பற்றியும் ஆலோசிக்க இருப்பதால் உறுப்பினர்களைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

• • •

சென்னை :—குடி மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், 11-12-49 ஞாயிறு காலை 10 மணிக்கு, வாத்தியார் சுந்தப்பிள்ளைத் தெரு நகராண்மைக் கழகப் பள்ளியில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். அதுபோது அரசினர் கலைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் க. தங்கவேலன் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) திருக்குறளில் 'திவினை" என்பது பற்றி விரிவுரையாற்றுவார்.

• • •

சென்னை:—ஓட்டேரி, தி. மு. கழகக் கிளையின் சார்பில் 11-12-49 ஞாயிறு காலை 10 மணிக்கு, புலவர் வே. த. அரசனார் அவர்களால் திருக்குறள் வகுப்பு நிகழ்த்தப்பெறும். இடம்:- 21 பிரிக்லி ரோடு, ஓட்டேரி

* * *

சென்னை :—தோழர் ஜி. வீரராகவன்—தோழியர் எஸ்.முனியம்மா திருமணம், 11—12—49 ஞாயிறு காலை 8-30மணிக்குதோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் பூ. கணேசன் எம். ஏ., மாஞ்சி மணிமொழியர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இடம்:—என். 1, சேவல் ஆஸ்பத்திரி ரோடு, 9-வது பெரியமெட்.

* * •

சென்னை—சைதாப் பேட்டை கார்ப்பரேஷன் முஸ்லீம் பெண்கள் பள்ளியின் புதிய கட்டிடத்தை 12—12—49 திங்கள் காலை 10-30 மணிக்கு சர். முகம்மது உஸ்மான் சாகிப் பகதூர் திறந்து வைப்பார். டாக்டர் பி.வி. செரியன் (சென்னை மேயர்) தலைமை வகிப்பார்.

* • *

சென்னை —சென்னை சேரி வாழ்வோரின் இரண்டாவது மாநாட்டுக்கு வரவேற்புக்குழு அமைப்பதற்காக 11 12-49 ஞாயிறு காலை 8 மணிக்கு ஹார்பார் டெனமென்டிலுள்ள ஒய். எம் சி. ஏ. பாடசாலையில் சேரிவாழ்வோரின் கூட்டமொன்று நடைபெறும். ஒவ்வொரு சேரியிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் வந்து கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

* * *

மாம்பலம்— இசை வேளாளர் மத்திய சங்கத்தின் 3-வது ஆண்டுத் தேர்தல் கூட்டம், மாம்பலம் கெடம் டி. வி. பட்டுப்பிள்ளை அவர்கள் வீட்டில் நடைபெறும். திருவிழந்தூர் சங்கீத வித்வான் ஏ. கே. கணேசம் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

* * *

கல்லாரப்பட்டி :— திண்டுக்கல்லை யடுத்த கல்லாரபட்டி தி. மு. க. கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டம், 11-12-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு இவ்வூர் அர்ச்சனன் திடலில் நடைபெறும். அதுபோது தோழர் சோ. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் திண்டுக்கல் தோழர்கள் என். முத்து, எம். பரமசிவம், அங்குசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

தஞ்சை—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 11—12—49 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு கீழவாசல், தோழர் என் பெத்தண்ணன் அவர்கள் அலிமேனியம் பாக்டரியில் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்கள்

அனுதாபம்

சென்னை, டிச 8—

நமது இயக்கத் தோழர் பி. எஸ். பாலகிருஷ்ணன் அவர்களின்வாழ்க்கைத் துணைவி தோழியர் அங்கம்மாள் 21-10-49 வெள்ளி அன்று மதுராந்தகம், அவரது இல்லத்தில் இயற்கை எய்தியதை அறிந்து வருந்துகிறோம், நங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்திற்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம் என, எழும்பூர் தி. மு. கழகத்தினர் அறிவிக்கின்றனர்:

விரைவில் வெளிவருகிறது!

★

'தமிழ்நாடு'

திராவிடர் திங்கள் வெளியீடு

தனிப் பிரதி அணா 2.

வருட சந்தா ரூ. 1-8-0

—: விவரங்களுக்கு :—

தமிழ்நாடு பதிப்பகம்,

மண்ணடி :: சென்னை-1.

பொழுதுபோக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை —இமயத்தில் நாம்

தமிழ்—சினிமா

பாரகன்	— வேலைக்காரி
கிரௌன்	— இன்பவல்லி
செலிட்டி	— "
சன்	— மங்கையர்க்கரசி
பிரபாத்	— அபூர்வ சகோதரர்கள்
வெலிங்டன்	— "
சரஸ்வதி	— சக்ரதாரி
மகாராணி	— வேதாள உலகம்
பாலி	— போஜன்

தெலுங்கு

சயானி	— லைலா—மஜ்னு
ஸ்டார்	— ரத்தனமாலா

ஆங்கிலம்

Casino	— The Girl from Jones Beach
New Globe	— The Lost Tribe
New Elphinstone	— The Great Gatsby
Midland	— Christopher Columbus
Roxy	— Texas
Minerva	— Johnny Belinda

ஹிந்தி

சினிமாசென்ட்ரல்	— துப்பான்-மெயில்
பிராட்வே	— ஷெஹனாய்
செலக்ட்	— பரி பகன்
சாகர்	— சேன்ஸ் ஸ்கூல்

திராவிட முன்னேற்றக் கழகம்

❖

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

❖

350

❖

போகிற போக்கில்...!

"ஆறு மாதங்களில் கண்ட்ரோல்கள் ஒழியும்"

— டாக்டர் பட்டாபி சீதாராமய்யா

அந்த ஆறுமாதம் எப்படி ஒழியுமோவெனக்கலங்குகிறார்கள் சுயராஜ்ய முதலாளிமார்!

* * *

தேவஸ்தான நகைகளை அடகுவைத்த இராணிப்பேட்டை சண்டமாருதம் ராமானுஜாச்சாரியார், வாலாஜா சப்-மாஜிஸ்ட்ரேட்டால் ரூ 200 அபராதம் விதிக்கப்பட்டார்.

—செய்தி

சே! இவரென்ன உலகந் தெரியாத மனுஷராயிருக்கிறார். நகைகளை இப்படி அடகு வைத்தா மாட்டிக்கொண்டு விழிப்பது! எத்தனை யெத்தனை தேவாலயங்களில் நகைகள் திடீர் திடீரெனத் திருட்டுப் போய்,போலீசார் புலன் விசாரணை செய்யப் புகுவதோடு விஷயம் முடிந்துவிடுகிறது! அதுபோன்ற 'சாத்வீக' முறையை மேற்கொள்ளக் கூடாதா, ஆச்சார்யசாமிகள்!

* * *

"சுயமரியாதை இல்லாத மக்களே பிச்சைக்காரர்களாக மாறுகின்றனர்"

— சென்னை மேயர் செரியன்

பிச்சைக்காரர்களாயில்லாத மக்களெல்லாம், சுயமரியாதையோடு இருக்கின்றனரென்று கூறுகிறாரா?

* * *

'செயற்கை மழை பெய்விப்பதற்குத் தேவையான யந்திரக் கருவிகள் இல்லாததினால், ராயல் இந்தியப்படையினர் அதற்கான பரிசோதனையை நடத்தவில்லை"

—மந்திரி தெளலத்ராம்

மழையை வருவிக்க யந்திரக் கருவி யெதற்கு, விமானப்படை யெதற்கு, புலங்கா யெதற்கு? பாபாத்மாக்கள் நிறைந்த இப்பொல்லாச லோகத்தை ரட்சிப்பதற்கென்றே வந்திருக்கும் பூதேவ சிரோன்மணிகளைத் தண்டனிட்டு அழைத்து, 50-டன் சந்தனக்கட்டை, 500 டின் சுத்த நெய் இன்னபிற யாக வஸ்துக்களை அவர்களிடம் ஒப்புவித்துவிட்டால், ஓமகுண்டத்தை வளர்த்து, ஒரு சில மணி நேரங்களில் வருண பகவானை வரவழைத்துவிடமாட்டார்களா! என்ன போங்கள், கொஞ்சங்கூட முன் யோசனையே யில்லை நம் சர்க்காருக்கு!

* * *

"நர்ஸுகள் கலாட்டா: காலேஜ் பிரின்சிபாலை அடித்து நொறுக்கினர்!"

—செய்தித் தலைப்பு

அடிக்க உபயோகித்த ஆயுதமெதுவோவென்று கவலைப்படுகிறார் ஒரு சமாதான விரும்பி!

* * *

'இந்துஸ்தானம் தமிழ்நாடும் சேர்ந்து பணிபுரியுமாயின், தமிழர்களின் பேராதரவு கிடைக்குமென்று நம்புகிறேன், வாலாஜாபேட்டை கிட்டப்பா இலவச இந்தி சங்கீதப் பாடசாலையின் ஆண்டு விழாவில் பேசிய தோழர் எம். கே. தியாகராச பாகவதர் குறிப்பிட்டார்.'

—செய்தி

அவர்களது நோக்கமும், விருப்பமும் அதுவல்லவே! விரும்பாத இடத்தில், வேண்டாத கருத்தை வீணுகக் கொட்டியுள்ளார் பாகவதர்! பாவம், பாகவதரை சு. ம. என்றே முடிவு கட்டிருப்பரோ? அன்று!

* * *

'கள்ளமார்க்கெட்டில் குழந்தைகள் விற்பனை பிரிட்டனில் அதிகரித்துக் கொண்டே வருகிறது'

—செய்தி

இதுவரையில் திறந்தமார்க்கெட்டில் விற்பனை நடந்து வந்ததோ! சர்க்கார் கன்ட்ரோல் விதித்திருப்பார்களோ; என்னவோ!

* * *

'உலக உணவு பற்றாக்குறை பல தலைமுறை நீடிக்கும்"

— எடின்பரோ பேராசிரியர்

கல்லும் மண்ணும் (இதற்கு ரேஷன் அரிசி யென்றும் ஒரு பெயர் உண்டு) உலகத்தில நிலைபெறும் வரையில், எங்களுக்குக் கவலையே இல்லை போங்கள்!

* * *

சந்திரநாகூரில் நெருக்கடியான நிலைமை. நீதிபதிகளுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லையாம்.

—செய்தி

சம்பளம் கொடுக்க மறுக்கும் சர்க்காருக்கு, என்ன தண்டனை பென்பதைச்சட்டப் புத்தகத்தில் பார்த்து, அதற்கேற்ப நீதி வழங்கி விடுவதுதானே நியாயமான போக்காகும்!

"ஜவுளி வியாபாரத்தில் 13 மாதங்களாக கள்ளமார்க்கெட்டே இல்லை."

—கன்ட்ரோல் டைரக்டர்

அப்படியானால், 'ரகசிய லாப முறை' இருக்கிறதோ!

* * *

"உலக சமாதானப் பிரியர்கள் மாநாட்டில், டிசம்பர் 6-ந் தேதியன்று மாலை மகாபாரத கதையைச் சார்ந்த நடனநாடகமொன்று நடத்திக் காட்டப்பட்டது"

—செய்தி

சமாதான மாநாட்டில் மகாபாரதக்கதையைமட்டும் நடத்தால் போதுமா? என்ன யோசனை தெரியாதவர்களாயிருக்கிறீர்களே! ஜப்பான், ஜெர்மன் யுத்த நிகழ்ச்சி செய்தி படங்களையும் திரையிலிட்டுக் காட்டியிருக்க வேண்டாமா!

ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டையர்களின் முடிவு

டர்பன், டிச. 9—

ஒட்டிக்கொண்டு பிறந்தஇரட்டைக் குழந்தைகள், நான்கு மாதகாலம் உயிருடனிருந்துவிட்டு பின் இறந்து விட்டன. ஏதோ கோய்கள் சிலுந்தான் மரணம் ஏற்பட்டதாம்.

கற்பனை உரையாடல்

கண்டதும் :: :: கேட்டதும்

[இடம்: மயிலாப்பூர் அக்கரகாரம்;
உரையாடுவோர்: சுப்பு சாஸ்திரிகள், ரங்காச்சாரியார்;
காலம்: காலை மணி 9]

பள்ளிச்சிறுவன் ஒருவன் கையில் புத்தகங்களுடன் சுப்பு சாஸ்திரிகள் வீட்டிற்கு வருகிறான்; அவ்வீட்டு வாயிலில் நின்றபடியே "டேய் பேட்டு" என்று கூப்பிடுகிறான். திண்ணையில் ரங்காச்சாரியுடன் பேசிக்கொண்டிருக்கும் சுப்பு சாஸ்திரி அந்தச் சிறுவனைப் பார்த்து கேட்கிறார்:—

சுப்: இதென்னடா மணி இன்னைக்கு இவ்வளவு சீக்கிரம் கிளம்பிட்டே! பேட்டு இன்னும் சாப்பிடக்கூட இல்லையேடா...

ரங்: பையன் யாராத்துப் பையன்?

சுப்பு: நம்ப கோடியாத்து குப்புஸ்வாமி ஐயர் இருக்காரோன்னோ அவர் சன் தான்!

ரங்: ஓகோ! அதான் பயசுட்டிப் பலசாயிருக்கான்....சரி இங்கே வாடா அம்பி (பையன் அருகில் வருகிறான், அவன் கையிலிருந்த புத்தகங்களையெல்லாம் வாங்கி ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்துக்கொண்டே) என்னடா, நன்னா வாசிக்கிறியா. உம்...இதென்னடா புஸ்தகத்தோடே என்னென்னமோ பேப்பரெல்லாம் வச்சிருக்கியே! இதெல்லாம் நோக்கு என்னத்துக்கடா?

சுப்: எங்கே அதை இப்படிக் கொடும், என்ன பேப்பருன்னு பார்ப்போம் (ஆச்சாரியார் கொடுக்க சாஸ்திரியார் வாங்கிப் பார்க்கிறார்)

அட்லாசுக்குள் "மாலைமணி" பத்திரிகை இருக்கக் கண்டு திடுக்கிட்டு) டேய்! இதென்னடாயிது; உனக்கு நோக்கு இந்தப் பேப்பரெல்லாம்! இதெல்லாம் படிச்சியோ குட்டிச்சுவரான்னோ போயிடுவே. (தெற்குள் ரங்காச்சாரி குறுக்கிட்டு)

ரங்கா: அதென்னங்காணும் அப்படிப்பட்ட பேப்பர்!

சுப்பு: "மாலை மணி"ங்காணும் "மாலை மணி!"

ரங்: ஐயையோ! அதெப்படிங்காணும் இந்தப் பயலிடம் அகப்பட்டது! (மணியைப் பார்த்து) டேய் இது ஏதடா நோக்கு?

மணி: அது என்னுது இல்லே மாமா, என் பிரண்ட் ஒரு பையன் வச்சிருந்தான்; வாங்கிப் பார்த்தேன்; நன்னா இருந்தது, படிச்சுட்டுக்கொடுக்கிறேன்னு வாங்கிண்டு வந்தேன்...

ரங்: சரி, சரி நீ படிச்சது போதும்! இனிமே இந்தமாதிரி பேப்பரெல்லாம் படிக்கப்படாது. கொண்டு போய், எந்தப் பையனிட்ட வாங்கினியோ அந்தப் பையனிட்டயே கொடுத்துடு (இதற்குள் இட்டு புறப்பட்டுவிடுகிறான். அவனைக் கண்டதும்)

மணி: சரி, கொடுங்க மாமா, [illegible]க்கு [illegible] அவுத [illegible]'என்று சொன்ன பேப்பர், புத்[illegible] [illegible] வாங்கிக் கொண்டு இட்டுவுடன் அவ்விடம் வீட்டுச் செல்கிறான்.)

ரங்: ஓய், பார்த்தீயளா, விஷயம் எவ்வளவு தூரம் வந்துட்டு இருக்குன்னு...பள்ளிக்கூடத்து பயல்களெல்லாம் அவா பத்திரிகையைப் படிக்க ஆரம்பிச்சுட்டான்களே...!

சுப்: அதிருக்கட்டும், அதென்ன திராவிடர் கழகப் பத்திரிகை தானே, அதை யாருங்காணும் கவனிக்கிறா...? அப்போ நாயக்கர் கல்யாணம் பண்ணிண்டாரோ அப்பவே அந்தக் கட்சி தொலைஞ்சு போச்சுதே!

ரங்: சரியாப் போச்சு! இவ்வளவுதான் நோக்குத்தெரிஞ்சது போலிருக்கு! இப்போ நீர் பார்த்தீயளே...அது திராவிடர் கழகப் பத்திரிகையில்லேங்காணும், திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகை!

சுப்பு: ஓகோ! அப்படின்னா ...திராவிடர் கழகம் வேறே... திராவிட முன்னேற்றக் கழகம் வேறேயோ!

ரங்க: ஆமாங்காணும்... ஆமாம்! இப்போ இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகந்தான். நீர் இப்போ சொன்னேளோன்னே அந்தக் கட்சி தொலைஞ்சு போச்சுன்னு...அது தான் திராவிடர்கழகம். திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியல்ல; நீர் நினைக்கிறதுக்கு நேர்மாறாக ரொம்ப வேகமா வேலை செய்ய ஆரம்பிச்சிருக்கு. நீர் நெனச்ச மாதிரிதான் நானும் நெனச்சேன், நாயக்கர் கல்யாணத்தோடே கழகமே நசிஞ்சுப் போயிடுமின்னு ஆனால் இப்போ விஷயம் இன்னும் விபரீதமான்னா போயிட்டது!

சுப்பு: தள்ளுங்காணும் குப்பையை; எல்லாம் நமக்குத் தெரிஞ்ச விஷயந்தானே, இவாளாலே என்ன செய்ய முடியும்? அவாளிடத்திலே உருப்படியான திட்டமோ வேலையோ கிடையாதுன்னு நேக்கு நன்னா தெரியும். அதுமட்டுமென்ன; அப்படியிருந்தாலும் வரப்போற நியூ கான்ஸ்டிடியூஷனில் அவா ஜம்பம் பலிக்காது.

ரங்: அட நீர் என்னங்காணும் சுத்தப் பயித்தியக்கார மனுஷராயிருக்கிர். அவாளை இப்போ என்னமாயிருக்குன்னு நோக்குத் தெரியாது. எங்கபார்த்தாலும் அவா பேர், அவா பலிசி, அவா பேச்சு இதுதான் அடிபடுது. ஒரு சாதாரண ஸ்கூல் பையனுக்கு நம்மாலே பதில் சொல்ல முடியலேங்காணும்! கழகம் முன்னேயப்போலிருக்குன்னு நினைச்சுண்டு ஏமாந்து போயிடாதீர் ஓய்! முன்னே இருக்கறதோட டார்கட்சி; இப்பொழுது இரு பதுக ஞ்சிபுரத்தார் கட்சி சரோட்டையா ஏ ரத்தினமும் ஏராத்தலாம், அந்த காஞ்சி ரத்தாளை எதாரற முடியாதேங்காணும்!

சுப்பு: அட, அப்படியென்னுங்காணும் பிரமாதமாசாதிச்சுட போறு. திராவிட நாடு கிடைக்குமின்னு மனவு காண்றா; இது நடக்கிற காரியமா? அந்த நாயக்கர் என்னமோ பிரமாதமா பிடிவாதம் பிடிச்சுண்டிருந்தார். கடைசியிலே என்னஆச்சுபார்த்தியளோன்னோ? எல்லாம் அப்படித்தாங்காணும்.

ரங்: உம்...! நீர் என்னங்காணும் உலகம் தெரியா மனுஷராயிருக்கீர். நாயக்கர் விஷயம் வேறே. பாவம், அந்த மனுஷர் வெறுப்பிலே என்னென்னமோ பேசிண்டிருந்தாரே தவிர பொறுப்புள்ள வாரா நல்ல மனுஷனுயிட்டாரே. நம்மவா மேலே அவருக்குக் கொஞ்சநாளா பிரேமையின்னே உண்டாச்சுது. ரொம்ப தூரம் போவானேன், நம்ம சர்மா இருக்காரே அவரைக் கேட்டாலே சொல்லுவாரே.

சுப்பு: யார்; எந்த சர்மா?

ரங்: அவர்தாங்காணும் மாவூர் சர்மா?

சுப்பு: ஓகோ! ஆமாம்... ஆமாம்...புரியுது...புரியுது.

ரங்: அதுமட்டுமில்லேங்காணும் இருண்ணுமலையிலே பேசச்சே ஆச்சாரியார் என்ன சொன்னார் தெரியுமோ; நாயக்கர் கட்சிகைக்கண்டு யாரும் பயப்படத் தேவையில்லேன்னு நம்மவாளுக்கு உபதேசம் பண்ணினாரே அதுகூட ஞாபகமில்லையே இதையெல்லாம் பார்க்கிறபோது என்ன தோணறது நாயக்கர் கட்சியே இருந்தா நல்ல தின்னு தோணறது...காஞ்சிபுரத்தார் சமாச்சாரம் அப்படியில்லியே அ. மு. பிரசாரத்தோடே, பாலிடிக்சுமின்னோ பேசுறா! அவா திட்டத்தையெதுவும் யாரும் எதிர்க்கமுடியலியேங்காணும்... தெரியாமலா நம்ம ஆச்சாரியார் பூரியிலே பேசச்சே பாஷவாரி மாகாணம் கூடாதுன்னு பேசினார்.

சுப்பு: ஆமாங்காணும் ஆமாம்! நானும் நியூஸ் பார்த்தேன். அவர் ஏன் அப்படி பேசியிருக்கேர். அவர் ஆப்ஜெக்ட்தான் என்ன?

ரங்: ஆப்ஜெக்டாவது மண்ணாங்கட்டியாவது. எல்லாம் அவா சொல்றதுபோல திராவிடாடு செப்பரேஷனிலேதான் வந்து முடியுது.

சுப்: ஆமாங்காணும்.....நீர சொல்றதும் பொருத்தமாகத் தானிருக்கு...உம்...என்ன நடக்குதோ பார்ப்போம். சரி, கொஞ்சம் பொடி கொடும். (பொடியை வாங்கிப் போட்டுக்கொண்டு) நான்..வரட்டுமோங்காணும், செகரட்டேரியட் வரை போயிட்டு வரணும், அப்பறம் பேசிக் கொள்ளலாம்.
(அவ்விடம் விட்டுச் செல்கிறார்)

ஆந்திர புயல் சேத நிவாரண நிதி

ஆந்திர புயல் சேத நிவாரண நிதிக் குழுவின் சார்பில் சென்னை நகராண்மைக் கழக தலைவர் தோழர் பி. வி. செரியன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந் நிதி சேர்க்கும் விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க டிசம்பர் 10-ந் தேதி ரிப்பன் கட்டிட ஆலோசனை மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெறும்.

வானொலி

(11-12-49 ஞாயிற்றுக்கிழமை)

சென்னை
[211.3 மீட்டர்கள்]

காலை:
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 8-30 பாப்பாமலர்
- 9-00 வாத்யஇசை (இசைத்தட்டு)

பிற்பகல்:
- 1-00 எஸ். வி. பார்த்தசாரதி குரலிசை
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 2-00 தமிழில் செய்திகள்
- 3-00 ருக்மிணி ராஜகோபாலன்—பாட்டு

மாலை:
- 4-00 சதம்பம் இசைத்தட்டு
- 5-30 எம். எஸ். சந்திரசேகரய்யர்—பாட்டு
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 ஞானம் சந்தானம்—பாட்டு
- 6-45 எம். ராமமூர்த்தி—பாட்டு

இரவு:
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 நால்வகை இசைத்தட்டு
- 8-00 ருக்மிணி சௌந்தரராஜன்—பாட்டு
- 8-30 பி. டி. ராஜப்பா—வயலின்
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 எஸ். வி. எஸ். நாராயணன்—பாட்டு
- 10-30 முடிவு.

திருச்சி
[395.8 மீட்டர்கள்]

காலை:
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 கே. ரத்தமணி—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 ஜி. என். பாலசுப்ரமணியம்—இசைத்தட்டு
- 8-30 எல். சசிலாதேவி—வீணை

பிற்பகல்:
- 12-00 கன்னியின் காதலி- இசைத்தட்டுத் தொகுப்பு
- 12-35 காப்பிரக்கம் தொடர்ச் சித்திரம்
- 12-50 அகால[illegible]க்கரம் இசை நாடகம்
- 1-00 மணிமலர்
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 ஏ. ஜி. சுப்ரமணியம் (ஓ.ப.)
- 2-00 தமிழில் செய்திகள்
- 2-10 பெண்ணுலகம்
- 2-30 நீங்கள் கேட்டவை (இ.த.)

மாலை:
- 5-00 கே. ரத்தமணி—பாட்டு
- 5-40 எல். சசிலாதேவி—வீணை
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 சக்ரதாரி (இ.த.)
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
- 7-45 ஓ. பி. ராமஸ்வாமி—பேச்சு
- 8-00 கே. சி. தியாகராஜன்—பாட்டு
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-45 இசைவேலை (இ.த.)
- [illegible]

மூல வியாதிக்கு
கருணைக்கிழங்கு லேகியம்

மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, நீர்க் கசிவு, ரணம் சுகமாகும்; வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.
12 நாள் மருந்து ரூ 3—0—0
12 நாகபஸ்பம் ரூ. 2—0—0
P.S.R. பங்கஜம் வைத்தியசாலை
பழனி (S. I.)

கள்ளோ? காவியமோ?
டாக்டர் மு. வரதராசன் அவர்களின்
மிகச் சிறந்த நாவல்
இரண்டாம் பதிப்பு
விலை ரூபாய் மூன்று.
பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.